**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 68** **நாள் : 01.02.2026**

**பெருநகர சென்னை மாநகராட்சியில் ஜனவரி 2025 முதல் 29.01.2026 வரை 4 இலட்சம் மெட்ரிக் டன் கட்டடம் மற்றும் இடிபாட்டுக் கழிவுகள் அகற்றப்பட்டுள்ளது. கட்டடம் மற்றும் இடிபாட்டுக் கழிவுகள் குறித்த வழிகாட்டுதல் நெறிமுறைகளை பின்பற்றாத 3,131 நபர்களிடமிருந்து ரூ.1.57 கோடி அபராதமாக வசூலிக்கப்பட்டுள்ளது.**

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மைப் பணிகள் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகின்றன. சராசரியாக நாளொன்றுக்கு 6,300 மெட்ரிக் டன் திடக்கழிவுகள் அகற்றப்பட்டு வருகின்றன. மேலும், நாளொன்றுக்கு சராசரியாக 1000 மெட்ரிக் டன் கட்டடம் மற்றும் இடிபாட்டுக் கழிவுகள் அகற்றப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, சென்னை மாநகரினை சிங்காரச் சென்னையாக திகழச் செய்திடும் வகையில் சாலைகள், தெருக்கள், மக்கள் குடியிருப்புப் பகுதிகள், பாலங்கள், பேருந்து நிறுத்தங்கள், மயானபூமிகள் உள்ளிட்ட பொது இடங்களில் தூய்மைப் பணிகள் மேற்கொள்ளுதல் உள்ளிட்ட திடக்கழிவு மேலாண்மைப் பணிகள் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன

இதன் ஒரு பகுதியாக, பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் கட்டடம் மற்றும் இடிபாட்டுக் கழிவுகள் அகற்றும் பணி தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

சென்னை மாநகரம் வேகமாக நகரமயமாக்கப்பட்டு வரும் நிலையில், வீட்டு குப்பைகள் மற்றும் வணிக நிறுவன குப்பைகளுக்கு அப்பாற்பட்டு, புதிய வளர்ச்சித் திட்டங்கள், கட்டட இடிப்புகள் மற்றும் மறுகட்டுமானம், பழுதுபார்க்கும் பணிகள் காரணமாக கட்டுமானம் மற்றும் இடிபாட்டுக் (C&D - Construction & Demolition) கழிவுகள் பெருமளவில் உருவாகி வருகின்றன.

இந்த கட்டுமானம் மற்றும் இடிபாட்டுக் கழிவுகள் பொது சாலைகள், தெருக்கள், நடைபாதைகள், பாதசாரி நடைபாதைகள், மழைநீர் வடிகால்கள், கால்வாய்கள், ஆறுகள், ஏரிகள், காலி நிலங்கள் மற்றும் திறந்த வெளிகள் போன்ற அனுமதியற்ற இடங்களில் கொட்டப்படுவதன் காரணமாக, நீர்நிலைகள் மற்றும் ஆறுகள் கடுமையாக மாசுபடுவதும், கால்வாய்களில் அடைப்பு ஏற்பட்டு வெள்ள அபாயம் அதிகரிப்பதும், தூசி மற்றும் கழிவு துகள்களால் காற்று மாசுபடுவதும், பொது சுகாதாரம் பாதிக்கப்படுவதும், நகரினை அழகுபடுத்தும் (Beautification) முயற்சிகள் பாதிக்கப்பட்டு, பொதுமக்களுக்கு கண்கூடாகத் தோன்றும் அசுத்தமான சூழல் (Eye sore) உருவாகும் நிலை ஏற்படுகிறது.

இத்தகைய கட்டுமானம் மற்றும் இடிபாட்டுக் கழிவுகளை கொட்டுவதை அப்புறப்படுத்தவும், சுற்றுச்சூழல் மாசுபாட்டைத் தவிர்க்கும் நோக்கிலும், பெருநகர சென்னை மாநகராட்சி 2025 ஜனவரி மாதத்தில் கட்டடம் மற்றும் இடிபாட்டுக் கழிவுகளை அகற்றுவதற்காக சிறப்பு வாகனங்களை அறிமுகப்படுத்தியது. இவ்வாகனங்கள் மூலம்

கட்டடம் மற்றும் இடிபாட்டுக் கழிவுகள் கொட்டப்படும் இடங்களை கண்காணித்தல், அவற்றை அகற்றுதல் மற்றும் முறையான செயலாக்க நிலையங்களுக்கு அனுப்பி மறுசுழற்சி பயன்பாட்டிற்கு கொண்டு வருதல் உள்ளிட்ட நடவடிக்கைகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்தத் திட்டம் கடந்த ஜனவரி 2025 முதல் செயல்படுத்தப்பட்டு 29.01.2026 வரை பெருநகர சென்னை மாநகராட்சி வடக்கு வட்டாரத்தில் (மண்டலம் 1 முதல் 5 வரை) 1.16 லட்சம் மெட்ரிக் டன் கழிவுகளும், மத்திய வட்டாரத்தில் (மண்டலம் 6 முதல் 10 வரை) 1.65 லட்சம் மெட்ரிக்டன் கழிவுகளும் மற்றும் தெற்கு வட்டாரத்தில் (மண்டலம் 11 முதல் 15 வரை) 1.20 லட்சம் மெட்ரிக்டன் கழிவுகள் என மொத்தம் 4 லட்சம் மெட்ரிக் டன் கட்டுமானம் மற்றும் இடிபாட்டுக் கழிவுகள் சேகரிக்கப்பட்டு, வழிகாட்டு நெறிமுறைகளின்படி செயலாக்க மையத்திற்கு அனுப்பப்பட்டுள்ளன. இது நீர்நிலைகள் பாதுகாப்பு, காற்று மாசுபாடு குறைப்பு மற்றும் நகர சுத்தம் ஆகிய துறைகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

**பெருநகர சென்னை மாநகராட்சியில் மண்டலம் வாரியாக கட்டடம் மற்றும் இடிபாட்டுக் கழிவுகள் அகற்றிய விவரம் : (ஜனவரி 2025 முதல் 29.01.2026 வரை)**

| வ. எண் | மண்டலங்கள் | அகற்றப்பட்ட கட்டிடம் மற்றும் இடிபாட்டுக் கழிவுகள் (மெட்ரிக் டன்) |
|---|---|---|
| 1. | திருவொற்றியூர் | 17,769 |
| 2. | மணலி | 15,400 |
| 3. | மாதவரம் | 23,873 |
| 4. | தண்டையார்பேட்டை | 30,946 |
| 5. | இராயபுரம் | 27,862 |
| 6. | திரு.வி.க.நகர் | 24,988 |
| 7. | அம்பத்தூர் | 24,748 |
| 8. | அண்ணாநகர் | 35,953 |
| 9. | தேனாம்பேட்டை | 41,455 |
| 10. | கோடம்பாக்கம் | 37,500 |
| 11. | வளசரவாக்கம் | 18,504 |
| 12. | ஆலந்தூர் | 21,510 |
| 13. | அடையாறு | 39,967 |
| 14. | பெருங்குடி | 22,507 |
| 15. | சோழிங்கநல்லூர் | 17,257 |
| **மொத்தம்** | | **4,00,239** |

இப்பணிகளுக்காக 15 மண்டலங்களிலும் டிப்பர் வாகனங்கள், பாப்காட் வாகனங்கள், ஜே.சி.பி. வானகங்கள், டாடா ஏஸ் வாகனங்கள், டிப்பர் லாரிகள் உள்ளிட்ட 168 வாகனங்களைப் பயன்படுத்தி சராசரியாக நாளொன்றுக்கு 1000 மெட்ரிக் டன் கட்டடக் கழிவுகள் அகற்றப்படுகின்றன.

மேலும், மாநகராட்சிப் பகுதிகளில் கட்டடம் மற்றும் இடிபாட்டுக் கழிவுகள் குறித்த வழிகாட்டுதல் நெறிமுறைகளை பின்பற்றாத 3,131 நபர்களிடமிருந்து ஜனவரி-2025 முதல் 29.01.2026 வரை ரூ.1.57 கோடி அபராதமாக வசூலிக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் கட்டடம் மற்றும் இடிபாட்டுக் கழிவுகள் தொடர்பான வழிகாட்டு நெறிமுறைகளை பெருநகர சென்னை மாநகராட்சி (https://chennaicorporation.gov.in/gcc/CandD_Waste_Management/) இணையதளத்திலும், மாநகராட்சியின் 1913 என்ற உதவி எண்ணிலும் தொடர்பு கொண்டும் விவரங்களைத் தெரிந்து கொள்ளலாம்.

சுத்தமான சென்னை, பாதுகாக்கப்பட்ட நீர்நிலைகள் மற்றும் ஆரோக்கியமான சுற்றுச்சூழலை உருவாக்க, பொதுமக்களும், கட்டுமானத் துறையினரும், ஒப்பந்ததாரர்களும் முழு ஒத்துழைப்பு வழங்கக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**